இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 03.03.2026

# மத்திய கிழக்கில் திடீர் போர்!

மத்திய கிழக்கில் திடீர் போர் மூண்டுள்ளது. அமெரிக்காவும் இஸ்ரேலும் சேர்ந்து ஈரான் மீது கூட்டுத் தாக்குதல் தொடுத்துள்ளது. இதனால் சுற்றியுள்ள நாடுகளின் வான்வெளி மூடப்பட்டுள்ளது. இது உலகத்தின் பல்வேறு நாடுகளை பாதிக்கும் போராக மாறி வருகிறது.

ஈரான் மீதான தாக்குதலுக்கு 'ஆபரேஷன் எபிக் ஃபியூரி' என்று அமெரிக்கா பெயர் சூட்டி இருக்கிறது. 'ரோரிங் லயன்' என்று பெயர் சூட்டி இருக்கிறது இஸ்ரேல்.

ஈரான் தலைநகர் டெஹ்ரான் முழுவதும் குண்டுகள் வெடிக்கும் சப்தம் கேட்கிறது. புகை மண்டலமாக அந்த நகர் காட்சி தருகிறது. ஒரே நாளில் 200க்கும் மேற்பட்டோர் இறந்திருக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

**ஈரான் தலைமை குரு அயதுல்லா அலி கமேனி இத்தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார். 86 வயதான இவர்தான் ஈரான் நாட்டின் உச்சத் தலைவர் ஆவார். அவருடன் அவர் மகள், மருமகன், மருமகள் ஆகியோரும் இறந்து போயிருக்கிறார்கள். இவர் கொல்லப்பட்டுள்ளது ஈரானை அதிகப்படியான கோபத்துக்குத் தள்ளி இருக்கிறது. ஈரான் பாதுகாப்புக் கவுன்சில் கூட்டத்தைக் குறி வைத்து அமெரிக்கா தாக்குதல் நடத்தியதால் முக்கிய தளபதிகள் கொல்லப்பட்டுள்ளார்கள்.**

இதற்கான பதில் தாக்குதலை ஈரானும் தொடங்கி இருக்கிறது. வடக்கு இஸ்ரேல் பகுதிகள் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதலை நடத்தியது. பஹ்ரைனில் உள்ள அமெரிக்க கடற்படைத் தலைமையகம் தாக்கப்பட்டுள்ளது. குவைத்தில் உள்ள அமெரிக்க ராணுவ முகாம் மீதும் தாக்குதல் நடந்துள்ளது. வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ முகாம்களை இலக்கு வைத்து தாக்கி வருகிறது ஈரான்.

**எதையும் தாங்கள் செய்தால் தவறு கிடையாது, மற்றவர்கள் செய்தால் தவறு என்று நினைக்கும் மனோபாவம்தான் இந்தப் போருக்கு அடிப்படைக் காரணமாக அமைந்திருக்கிறது.**

ஈரான் அணு ஆயுத தயாரிப்பை நிறுத்த வேண்டும், அணு ஆயுதம் தயாரிக்கத் தேவையான யுரேனியத்தை செறிவூட்டுவதை நிறுத்த வேண்டும், நீண்ட தொலைவு சென்று தாக்கும் ஏவுகணைத் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்று அமெரிக்கா தொடர்ந்து குற்றம் சாட்டி வருகிறது. அமெரிக்க அதிபராக டிரம்ப் வந்த பிறகு இக்கோரிக்கை வலுவடைந்தது.

இது தொடர்பாக அமெரிக்கா – ஈரான் நாடுகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. ஆனால் இதில் உடன்பாடு எட்டப்படவில்லை. எனவே ஈரானைச் சுற்றி போர்க் கப்பல்களை அமெரிக்கா நிறுத்தத் தொடங்கியது. 'அமெரிக்கா எப்போது தாக்குதல் நடத்தினாலும், நாங்கள் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ நிலையங்களின் மீது தாக்குதல் நடத்துவோம்' என்று ஈரானும் சொல்லி வந்தது.

ஈரான் அரசுக்கு எதிராக அந்த நாட்டில் உள்ளூர் மக்கள் நடத்தும் போராட்டத்துக்கு வெளிப்படையான ஆதரவை அமெரிக்கா தெரிவித்தது. 'போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக அமெரிக்கா களத்தில் இறங்கும்' என்றே டிரம்ப் அறிவித்தார்.

**அமெரிக்கா - ஈரான் இடையிலான பேச்சுவார்த்தை ஜெனீவாவில் உள்ள ஓமன் தூதரகத்தில் கடந்த பிப்ரவரி 25 ஆம் நாள் தோல்வி அடைந்தது. உடனடியாக மூன்றே நாளில் குண்டு போடத் தொடங்கி விட்டது அமெரிக்கா. 'இந்தப் போரால் உலக அமைதிக்கு எந்தப் பயனும் இல்லை. இதில் அமெரிக்கா சிக்கிக் கொள்ள வேண்டாம் ' என்று ஓமன் நாடு சொல்லி இருக்கிறது.**

'ஈரான் அணு ஆயுதங்களைத் தயாரிக்காது' என்று அந்த நாட்டின் அதிபர் மசூத் பெசஷ்கியான் சொன்ன பிறகும் அமெரிக்காவும் இஸ்ரேலும் போர் தொடங்கி இருப்பது சரியானது அல்ல. அணு ஆயுத தயாரிப்பு என்ற செய்தி உறுதிப்படுத்தப்பட்டது அல்ல என்று சர்வதேச அணுசக்தி முகமையும் சொல்லி இருக்கிறது. அதன் பிறகும் இதனை அமெரிக்கா செய்துள்ளது.

**இன்னொரு நாட்டின் மீது நுழைந்து தாக்குதல் நடத்துவதை அமெரிக்காவும் இஸ்ரேலும் எப்போது நிறுத்தும்?**

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான வெனிசுலா மீது கடந்த ஜனவரி மாதம் ஒரு நடவடிக்கையை எடுத்தார் அமெரிக்க அதிபர் டிரம்ப். அமெரிக்காவுக்குள் போதைப் பொருள் கடத்தலில் வெனிசுலா ஈடுபடுவதாக அதிபர் டிரம்ப் குற்றம் சாட்டி வந்த நிலையில், ஜனவரி 3ஆம் தேதி நிக்கோலஸ் மதுரோவும் அவரது மனைவி சிலியா ஃபுளோரன்ஸ் அமெரிக்கப் படைகளால் கைது செய்யப்பட்டுக் கப்பல் மூலம் நியூயார்க்குக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இது போன்றவை நியாயப்படுத்த முடியாதவை. இதுதான் மேலும் மேலும் தொடர்கிறது.

**இப்போரானது சர்வதேச அமைதிக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறி வருகிறது. அமெரிக்காவை ஆதரிக்கும் நாடுகள், ஈரானை ஆதரிக்கும் நாடுகள் என உலகம் பிரிந்து நிற்கிறது. 'அமெரிக்காவின் பேச்சுவார்த்தைகள் என்பவை வெறும் நாடகங்கள்' என்கிறது ரஷ்யா. 'ஈரானின் அத்துமீறல்களைக் கண்டிக்கிறோம்' என்கிறது கனடா. இத்தகைய கருத்துப் பிளவுகள் அதிகமாக ஆகி வருகிறது.**

ஐக்கிய நாடுகள் அவையின் பாதுகாப்புக் கவுன்சில் கூட்டத்தில் ஈரானும் அமெரிக்காவும் மாறி மாறி குற்றச்சாட்டுகளை வைத்துள்ளன. "கடந்த சில மாதங்களில் ஈரான் மீது அமெரிக்கா இரண்டாவது முறையாகத் தாக்குதல் நடத்தி இருக்கிறது. இது ஆக்கிரமிப்பு நடவடிக்கை, மனித குலத்துக்கு எதிரான போர்க்குற்றம்" என்று ஈரான் குற்றம் சாட்டி இருக்கிறது.

**எப்போது முடியும் என்று சொல்ல முடியாததாக இது மாறி வருகிறது. எந்தப் போராக இருந்தாலும், அதற்கு என்ன காரணம் சொல்லப்பட்டாலும், யார் தொடங்கினாலும் அதனால் பாதிக்கப்படுவது அப்பாவி மக்கள் தான். குண்டுகளும் ஏவுகணைகளும் ஒருபோதும் தீர்வாக அமையாது.**





வருகின்ற 2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலையொட்டி கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட அமைக்கப்பட்ட கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு தலைமையிலான குழுவினர் நேற்று (2.3.2026) அண்ணா அறிவாலயத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி. தலைமையில் நிர்வாகிகள் து.ரவிக்குமார் எம்.பி., சிந்தனை செல்வன் எம்.எல்.ஏ. ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.



சென்னையில் அண்ணா அறிவாலயத்தில் உள்ள திராவிட முன்னேற்ற கழக தலைமை அலுவலகத்தில் நேற்று (2.3.2026) கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு அவர்கள் வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் திருச்சி மேற்கு தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிட அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதியிடம் விருப்ப மனு அளித்தார். உடன் கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தலைமை நிலைய செயலாளர் பூச்சி முருகன், அண்ணா அறிவாலய மேலாளர் ஆர்.பத்மநாபன், கழக தொழிலாளர் அணி செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ், கழக இலக்கிய அணி துணைச் செயலாளர் ஈரோடு இறைவன், பெரம்பலூர் நாடாளுமன்ற எம்.பி. அருண், மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, வடக்கு மாவட்டச் செயலாளர் காடுவெட்டி தியாகராஜன், மண்ணச்சநல்லூர் எம்.எல்.ஏ. கதிரவன், மாநகராட்சி மேயர் அன்பழகன், பொருளாளர் துரைராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் மாத்தூர் கருப்பையா, காஜாமலை விஜய், டோல்கேட் சுப்பிரமணி உட்பட பலர் உள்ளனர்.

### 'என்னால் முடியும்' என்ற மந்திரச் சொல்லை மனதில் வைத்து

# தன்னம்பிக்கையுடன் தேர்வு எழுதுங்கள்!

## 10 மற்றும் 12–ஆம் வகுப்பு தேர்வு எழுதும் மாணவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

***சென்னை, மார்ச் 3 -***

***'என்னால் முடியும்' என்ற மந்திரச் சொல்லை மனதில் வைத்து, தன்னம்பிக்கையுடன் தேர்வு எழுதுங்கள் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தேர்வு எழுத உள்ள 10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.***

*பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வுகளை எழுதவிருக்கும் மாணவச் செல்வங்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு :-*

*தமிழ்நாட்டில் மாணவச் செல்வங்களுக்கான மேல்நிலை பொதுத்தேர்வு 02.03.2026 அன்று முதலும், பத்தாம் வகுப்புத் பொதுத்தேர்வு 11.03.2026 முதலும் தொடங்க இருக் கிறது. மேல்நிலைத் தேர்வை 7,99,692 மாணவ மாணவியரும் பத்தாம் வகுப்புத் தேர்வை 8,82,806 மாணவ, மாணவியரும் எழுத உள்ளனர்.*

*உயர்கல்வியே எங்கள் இலக்கு என்னும் உறுதியோடு ஆண்டு முழுவதும் ஊக்கத்தோடு படித்து உங்கள் குறிக்கோளின் நுழைவு வாயிலான மேல்நிலை/பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வை எழுத உள்ளீர்கள். கருத்தாய்ப் படித்து கல்விக் கடமையாற்றி அதன் பலன் கனியும் காலமிது.*

*"என்னால் முடியும்" என்னும் மந்திரச் சொல்லை மனதில் பதியுங்கள். அறிவில் தெளிவும், மனதில் துணிவும், செயலில் உறுதியும் இருந்தால் தேர்வு பற்றிய அச்சம் தேவையில்லை. தேர்வுகளை முனைப்பு டனும், முழு கவனத்துடனும் எழுதுங்கள். இக்காலத்தில் உங்கள் உடல் நலனும் மன நலனும் மிகவும் அவசியமானது. சத்தான உணவும், போதுமான தூக்கமும், மன அமைதியும் தேர்வுகளை எதிர்கொள்ளத் துணை நிற்கும். நம்பிக்கையோடும், மகிழ்ச்சியோடும், பதற்றமின்றியும் தேர்வை அணுகுங்கள். உங்கள் இலட்சியப் பாதையில் சிறிது தளர்ச்சி வந்தாலும் பதற்றமின்றி முயற்சி செய்யுங்கள்.*

*உழைப்பிற்கு ஏற்ற பலனை நிச்சயம் அடைவீர்கள். ஒவ்வொருவருக்குமான வாய்ப்பு பரந்து விரிந்து கிடக்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். உங்கள் உயர் கல்வி இலக்கினை அடைய புதுமைப்பெண், தமிழ்ப் புதல்வன், நான் முதல்வன் போன்ற சிறப்பான திட்டங்களைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதை நீங்கள் நன்கு அறிவீர்கள். அன்புக் குழந்தைகளே! மனவலிமையும், விடாமுயற்சியும், கடின உழைப்பும் உங்கள் வெற்றிப்பாதைக்கான படிக்கட்டுகள். தன்னம்பிக்கையுடன் தேர்வு எழுதுங்கள். உங்கள் உயர்வு தமிழ்நாட்டின் வளர்ச்சி. தேர்வு எழுதும் மாணவச் செல்வங்களாகிய நீங்கள் அனைவரும் சிறப்பான வெற்றி பெற என் உளப்பூர்வமான வாழ்த்துகள்!*

*இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.*

### தமிழ்நாடு – புதுச்சேரியில்

# 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு தொடங்கியது!

சென்னை, மார்ச் 3 -

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு நேற்று தொடங்கியது. 3,412 தேர்வு மையங்களில் 8 லட்சத்து 27,475 பேர் எழுதுகின்றனர். முறை கேடுகளைத் தடுக்க 4,540 நிலையான மற்றும் பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

பிளஸ் 2 பொதுத்தேர்வு நேற்று தொடங்கி 26ம் தேதி நிறைவு பெறுகிறது. முதல்நாளில் தமிழ் உட்பட மொழிப் பாடங்களுக்கான தேர்வு தேர்வு நடைபெற்றது.

இந்த தேர்வை மாநிலம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ள 3,412 தேர்வு மையங்களில் 8 லட்சத்து 27,475 பேர் எழுதினர். முறைகேடுகளைத் தடுக்க 4,540 நிலையான மற்றும் பறக்கும் படைகள் அமைக்கப்பட்டன.

தேர்வு மையங்களில் குடிநீர், இருக்கை, மின்சாரம், காற்றோட்டம், வெளிச்சம் மற்றும் கழிப்பறை வசதிகள் செய்யப்பட்டிருந்தது. இது தவிர மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தது. தேர்வறைக்குள் செல்போன் உள்ளிட்ட மின் சாதனப் பொருட்கள் கொண்டுவரத் தடை விதிக்கப்பட்டிருந்தது. ஹால் டிக்கெட்டில் உள்ள விதிகளைப் பின்பற்றி மாணவர்கள் நடக்க வேண்டும்.

விடைத்தாளில் நீலம் அல்லது கருப்பு நிற பேனாவால் மட்டுமே எழுத வேண்டும். அதேபோல், விடைத்தாள்களில் எவ்வித சிறப்புக் குறியீடு, தேர்வெண், பெயர் ஆகியவற்றை குறிப்பிடக் கூடாது.

மேலும், மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கான கூடுதல் நேரம் உட்பட சிறப்பு சலுகைகள் வழங்குதல் சார்ந்தும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

ஆள்மாறாட்டம் செய்வது, துண்டுத்தாள் அல்லது பிற மாணவர்களை பார்த்து எழுதுதல், விடைத்தாள் மாற்றம் செய்தல் போன்ற ஒழுங்கீன செயல்களில் ஈடுபடும் மாணவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். அதிகபட்சம் 3 ஆண்டு அல்லது நிரந்தரமாக தேர்வெழுத தடை விதிக்கப்படும். தேர்வு குறித்த சந்தேகங்கள் மற்றும் புகார்களைத் தெரிவிக்க 14417 மற்றும் 94983 83075, 94983 83076 எண்களை தொடர்புகொள்ளலாம்.